2022 ஏப்ரல் 6]

வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

56—

சிப்காட் தொழிற்பூங்கா

***14463—திரு. வி.ஜி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், காவேரிராசபுரம் கிராமத்தில் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10—15

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஒன்றியம், காவேரிராசபுரம் கிராமத்தில் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். அதேபோன்று, நமது சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் என் அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஒன்றியம், விவசாயம் அதிகம் இல்லாத ஒரு பகுதியாகும். வேலைவாய்ப்பு இல்லாமல், அங்கிருக்கும் இளைஞர்கள் சென்னைக்கு வேலை தேடி வரக்கூடிய ஒரு சூழ்நிலையில் இருக்கின்றார்கள். அப்படி இருக்கக்கூடிய சூழ்நிலையில், சிப்காட் அமைக்கப்படும், தொழிற்பேட்டை அமைக்கப்படும் என்று தேர்தல் நேரத்தில்,

தேர்தல் வாக்குறுதியை ஏற்கெனவே நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால், இன்றைக்கு நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிப்காட் தொழிற்பூங்கா அமைப்பது குறித்து பரிசீலனையில் இல்லை என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார். தங்கமான மனதிற்குச் சொந்தக்காரரர் அவர். ஏன் என்றால், அவர் பெயரிலே தங்கம் இருக்கிறது. அதனாலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதனை எடுத்துச் சென்று, அந்தப் பகுதியில் சிப்காட் அமைத்துத் தர வேண்டும். இருந்தாலும், நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் 2–9–2021 அன்று, தேர்தல் வாக்குறுதிப்படி, சிட்கோ மூலமாக 145 ஏக்கர் பரப்பளவில், ரூ.65 கோடி மதிப்பீட்டில் ஒரு தொழிற்பேட்டை அமைக்கப்படும் என்ற அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அதனை இந்த ஆண்டிலேயே தொடங்கிட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, இந்த கோரிக்கையை ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மூலக் கேள்விக்கு பதில் அளிக்கும்போது, தற்போது பரிசீலனையில் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறேன். அதன் உள் அர்த்தத்தை அவரும் புரிந்து கொண்டிருப்பார் என்று நானும் நம்புகிறேன். ஏனென்றால், அவருடைய மனதும் தங்கமான மனது என்பதை நான் அறிவேன். மிக எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய மனதும் அவருடைய மனது. இன்னொன்று, ஓர் இடத்தில் தொழிற்பூங்கா அமைக்க வேண்டும் என்கிறபோது, ஒட்டுமொத்தமாக அங்கிருக்கக்கூடிய நிலத்தைக் கையகப்படுத்துதல், அதாவது போதிய நிலம் கையிருப்பு, போக்குவரத்து வசதிகள், மின்சாரம், தண்ணீர் போன்று இதர வசதிகளையெல்லாம் கருத்தில்கொண்டு, தொழில் மனைகளின் தேவைகளையும் கருத்தில்கொண்டு, சாத்தியக்கூறுகளையெல்லாம் ஆய்வு செய்துதான் முடிவெடுக்கப்படுகிறது என்பதை ஏற்கெனவே இந்த அவையில் நான் தெரிவித்திருக்கிறேன். திருவள்ளூர் மாவட்டம், உள்ளப்படியே மிகுந்த தொழில் வளர்ச்சியுடைய மாவட்டம், அந்த மாவட்டத்திலே ஏற்கெனவே கும்மிடிப்பூண்டி, தேர்வாய்க்கண்டிகை, மப்பேடு, மாநல்லூர் போன்ற பல இடங்களில் தொழிற்பூங்காக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

2022 ஏப்ரல் 6]

நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, பட்ஜெட்டில், அதாவது 2022–2023 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், திருவள்ளூர் மாவட்டத்தில் சிப்காட் மூலமாக புதிய தொழிற்பூங்கா அமைக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அதனை ஆராய்ந்து, நல்ல முடிவுகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2009 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலான ஆட்சியில் என்னுடைய தொகுதியில் கடம்பத்தூர் ஒன்றியம், மப்பேடு ஊராட்சி, உசேன் நகரில் 1105/1 சர்வே நம்பரில் 125 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற்பேட்டை அமைப்பதற்கான ஓர் அரசாணை வெளியிடப்பட்டது. அது கடந்த பத்தாண்டுக் காலமாக கிடப்பில் இருக்கிற காரணத்தினால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் சீரிய முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அறிவுறுத்தி, நிச்சயமாக கலைஞர் அவர்கள் அறிவித்த இந்தத் திட்டத்தை, என்னுடைய தொகுதியில் உள்ள மப்பேட்டில் கொண்டு வர வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கின்றேன்.*

அதேபோல, திருத்தணி சர்க்கரை ஆலை திருவள்ளூர் தொகுதியில் இருக்கிறது. முன்பு, அந்தச் சர்க்கரை ஆலை திருத்தணியில் இருந்தது. இப்போது அந்தத் திருத்தணி சர்க்கரை ஆலையில் machine-*கள் எல்லாம் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. இருந்தாலும், அந்த ஆலைக்கு அரவைக்காக கரும்பு லாரிகள் அதிகளவில் வந்து, அந்த ஆலையில்தான் கரும்பு அரைக்கப்படுகிறது. எனவே, பழுதடைந்த நிலையிலுள்ள* machine *எல்லாம் மாற்றப்பட வேண்டும். எங்கேயாவது பயன் இல்லாத* machine *இருந்தாலும்—மதுரையில் இருக்கிறது என்று சொன்னார்கள்—அதனை மாற்றி, இந்த ஆலைக்குக் கொடுத்தீர்கள் என்றால், ஆந்திர மாநிலத்திற்கு கரும்பு அரவைக்குக் கொண்டு செல்லாமல், விவசாயிகள் இங்கு வந்து அரைப்பார்கள். அதேபோன்று ஆந்திராவில் இருக்கக்கூடிய விவசாயிகள்கூட இங்கு வந்து கரும்பை அரைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிற*

காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனைக் கவனித்து, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—20

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய மப்பேடு பகுதியில் 2009 ஆம் ஆண்டில் ஒரு தொழிற்பூங்கா அமைக்கப்பட்டு, அங்கே ஒரு பல்நோக்கு சரக்கு ஆளுமை மையம் (Multi–Modal Cargo Management Centre) அமைக்கப்பட்டு, அது சென்னை துறைமுகத்திற்கு தற்போது வழங்கப்பட்டுள்ளது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எங்கெல்லாம் தொழிற்பேட்டைகளை அமைக்க வேண்டுமோ, தொழிற்பூங்காக்களை உருவாக்க வேண்டுமோ, அவற்றை உருவாக்கி நமது தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்குரிய நடவடிக்கைககளை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவ்வப்போது எங்களுக்கு அறிவுரைகளை வழங்கிக்கொண்டிருக்கிறார். மற்றபடி அவர் குறிப்பிட்டிருக்கக்கூடிய திருத்தணி சர்க்கரை ஆலை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் பொறுப்பில் இருக்கிறது. எனவே, அதனை அவர்கள், கவனத்தில் எடுத்துக்கொள்வார்கள் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி அவர்கள்.

திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சார்பாக காலை வணக்கத்தினை அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவை மாவட்டம், சூலூர் தொகுதிக்குட்பட்ட சுல்தான்பேட்டை ஒன்றியம், வாரப்பட்டி ஊராட்சியில் தொழிற்பேட்டை அமைக்கின்ற திட்டம் அரசிடம் உள்ளதா? அவ்வாறு அமைக்கின்றபட்சத்தில் விவசாயிகளைப் பாதிக்காதவாறு

2022 ஏப்ரல் 6]

அந்தத் தொழிற்பேட்டை அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இத்தகைய தொழிற்பேட்டைகளை உருவாக்குவது என்பது தொழில் வளர்ச்சிக்கு மிக முக்கியமானதாக இருக்கின்றது. தொழில் வளர்ச்சி வேண்டுமென்றால், தொழிற்பூங்காக்கள் உருவாக்கப்பட வேண்டியது அவசியம். தொழிற்பூங்காக்களை உருவாக்குவதற்கு நிலம் ஓர் அத்தியாவசியத் தேவையாக இருக்கின்றது. கோவை மாவட்டத்தில் பாதுகாப்புத் தொழில் தடம்* (Defence Corridor) *வருகின்றபோது பாதுகாப்பு சம்பந்தப்பட்ட பல்வேறு நிறுவனங்கள் வருவதற்கு வாய்ப்பிருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், புதுடெல்லியில் மாண்புமிகு பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களைச் சந்திக்கின்றபோதுகூட, கோவையை மையமாக வைத்து பாதுகாப்புத் தொழில் சம்பந்தமான பல்வேறு நிறுவனங்கள் வருவதற்கான வாய்ப்புகளை உருவாக்க வேண்டுமென்று அவர்களிடத்தில் கோடிட்டுச் சொல்லியிருக்கிறார்கள்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, சூலூரில் 500 ஏக்கர் பரப்பளவில் ஒரு தொழிற்பூங்கா, குறிப்பாக, பாதுகாப்புத் தொழில் தடத்தில் உருவாக்க வேண்டுமென்றும், அங்கே அத்தகைய நிறுவனங்களை உருவாக்க வேண்டுமென்றும் கருத்துரு அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றது. இத்தகைய தொழிற்பூங்காக்களை உருவாக்குவதற்கு நிலம் எடுக்கின்றபோது, நீங்கள் குறிப்பிட்டதைப்போல, விவசாயிகள் அதனால் பாதிக்கப்படக் கூடாது என்பதில் அரசு அக்கறையாக இருக்கின்றது. அது கோவையில் மட்டுமல்ல, பல இடங்களிலும் இத்தகைய நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளும்போது, ஆங்காங்கே சில பிரச்சினைகள் அரசின் கவனத்திற்கு வருகின்றபோது, கூடுமானவரை அவர்களிடத்தில் பேச்சுவார்த்தை நடத்தி, விவசாயிகளுக்குப் பாதிப்பு இல்லாத வகையில், அதற்கான நில எடுப்புப் பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு தொழில் துறை நிச்சயமாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார் அவர்கள்.

திரு. A.P. நந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டமாக இருந்ததை மூன்று மாவட்டங்களாகப் பிரித்தபோது, சிப்காட் தொழில் வளாகம் என்பது ராணிப்பேட்டை மாவட்டத்திற்குச் சென்றுவிட்டது. இன்றைக்கு வேலூர் மாவட்டத்தில் படித்த இளைஞர்கள்—குறிப்பாக, எனது அணைக்கட்டு தொகுதி கிராமப்புறங்கள் நிறைந்த பகுதி. அங்கு படித்த பல இளைஞர்கள்—சென்னைக்கு வேலைக்குச் செல்கின்ற நிலை இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு தலைவர் அவர்களின் ஆட்சியில், அணைக்கட்டு தொகுதிக்கென்று சிப்காட் தொழிற்பூங்கா அமைத்துத்தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த பட்ஜெட்டில்கூட அறிவித்திருக்கிறார்கள். 2022–2023 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இந்த ஆண்டு சிப்காட் மூலமாக உருவாக்கப்படக்கூடிய தொழிற்பூங்கா வேலூர் மாவட்டத்தில் உருவாக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நந்தகுமார் அவர்களின் அணைக்கட்டு தொகுதியில், ஏற்கெனவே நான் துவக்கத்தில் குறிப்பிட்டதைப்போல, ஒரு தொழிற்பூங்காவினை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்குமென்று சொன்னால், நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான முயற்சியை அரசு ஆராய்ந்து மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், தமிழகத்தில் மிகவும் பின்தங்கிய மாவட்டம். திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்கக்கூடிய போளூர் சட்டமன்றத் தொகுதி, படித்தவர்கள், ஏழை, எளியோர்கள் அதிகமாக நிறைந்திருக்கின்ற பகுதியாக

2022 ஏப்ரல் 6]

இருக்கின்ற காரணத்தினால், அந்தத் தொகுதி மக்களுடைய நன்மைக்காக, முன்னேற்றத்திற்காக, அரசின் சார்பில் அந்தப் பகுதியில் ஒரு சிப்காட் தொழிற்பூங்காவினை அமைக்க அரசு முன்வருமா எனக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. அக்ரி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னதுபோல, திருவண்ணாமலை மாவட்டம், கல்வியில், வேலைவாய்ப்புகளில் பின்தங்கியிருக்கக்கூடிய ஒரு மாவட்டம். கடந்த ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றபின் சமர்ப்பிக்கப்பட்ட ஆளுநர் உரையில் தமிழ்நாட்டில் கல்வியில், பொருளாதாரத்தில், வேலைவாய்ப்புகளில் பின்தங்கியிருக்கக்கூடிய வட மாவட்டங்களில் இத்தகைய தொழிற்பூங்காக்களை அமைத்து, வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள்.

அந்த அறிவிப்பின் ஒரு பகுதியாக திண்டிவனத்தில் Cheyyar SEZ Developers Private Limited மூலமாக Lotus காலணி தயாரிப்பு நிறுவனத்திற்கு, நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய திருக்கரங்களாலே அடிக்கல் நாட்டியிருக்கிறார். எனவே, இத்தகைய மாவட்டங்களில் தொழிற்சாலைகளை அமைப்பதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவ்வளவு உறுதியாக இருக்கின்றார்கள்; ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற பழமொழிக்கேற்ப, அறிவித்த திட்டங்களை நிறைவேற்றுவதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முனைப்போடு இருக்கின்றார்கள்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஏற்கெனவே சிப்காட் மூலமாக தொழிற்பூங்காக்கள் அமைப்பதற்கான நில எடுப்புப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. செய்யார், போளூர் போன்ற பகுதிகளும் வளர்ந்து வரக்கூடிய industrial hub என்று சொல்லக்கூடிய தொழில் வளர்ச்சிக்கு ஏதுவான இடங்களாகக் கண்டறியப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கோரிக்கையை நிச்சயமாக, தொழில் துறை கவனத்தில் கொண்டு, வரக்கூடிய காலங்களில் தகுந்த முறையில்

ஆராய்ந்து, அந்த இடங்களில் தொழிற்பேட்டைகளையோ அல்லது தொழிற்பூங்காக்களையோ உருவாக்கக்கூடிய சாத்தியக்கூறுகளை அரசு நிச்சயமாக ஆராயும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், மேட்டூர் தொழிற்பேட்டை நிறைந்த தொகுதி. அதில் 5 வருடங்களுக்குமேல் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் நிரந்தரப்படுத்தப்படுவார்களா? மேட்டூர் தொகுதி, மேச்சேரியில் தொழிற்பேட்டை அமைக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. நீங்கள், தொழிற்பேட்டை வேண்டும், தொழில் வேண்டும் என்று கேட்டால் பதில் சொல்வார்கள். இதற்குத் தனியாக ஒரு கேள்வியைக் கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

57—

அடுக்குமாடிக் குடியிருப்புகள்

***12023—திரு. அ. பண்ணாரி:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,